பதிவு எண்: M. 6811 [illegible] ★ தொலைபேசி: 51881 நிறுவியது: 1958 ★ [illegible] ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 21 (5—8—68) திங்கள் ★ வெளியூர்: ஆடி 22 (6—8—68) செவ்வாய் [இதழ்: 44

ஐயோ பாவம்—! இந்தித் தந்தி!

தாடேபள்ளிகூடம், ஆக. 5—

இந்தி மொழியில் தந்தி அனுப்ப இதுவரை யாரும் முன்வரவில்லை என்று இங்குள்ள அஞ்சல்-தந்தி அலுவலகத்தில் விசாரித்ததில் தெரியவந்திருக்கிறது.

கடந்த ஜூலை 25-ம் நாளிலிருந்து இந்தியில் தந்தி கொடுக்க இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காகவென்று நியமிக்கப்பட்டிருக்கும் நபர் எந்த வேலையும் இல்லாமலே இருக்கிறாராம்!

மத்திய அரசின் இரட்டை வேடம்

சட்டம்-- ஒழுங்கு கீழ்மட்டத்துக்குப் போய்விட்டது

லஞ்ச ஊழலை ஊக்குவிக்கின்றனர்-- பதவி மூலம் பணக்காரராகின்றனர்!

காங்கிரசுக்காரர்களின் 'தேச சேவை'-- அம்பலப்படுத்துகிறார் சரண் சிங்

லக்னோ, ஆக. 3—

"நாட்டில் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையை அணுகுவதில் மத்திய அரசு இரட்டை முறையைப் பின்பற்றுகிறது.

"இலஞ்ச ஊழலைக் காங்கிரசுக் கட்சி திட்டமிட்டுப் பின்பற்றுகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு நேர்மையாக இருந்த அதிகாரிகள், காங்கிரசு அமைச்சர்களுடன் தொடர்புகொண்டதால், நேர்மையற்றவர்களாக மாறிவிட்டனர்"

என்று, உ. பி. மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் சரண் சிங் குற்றஞ்சாட்டினார். மேலும் அவர் விளக்கியதாவது:—

"நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் காங்கிரசு அக்கறைகொள்ளவில்லை.

"மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்னரும் தனி நபர் வருமானம் அமெரிக்காவைவிட 52 மடங்கு குறைவாக உள்ளது.

பாகிஸ்தானில் பொருளாதார வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சியைவிட நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது."

இங்கு நடந்த பாரதீய கிராந்தி தள மாநாட்டில் சரண்சிங் மூன்று மணிநேரம் பேசினார்; அவர், காங்கிரசு ஆட்சியின் உள்நாட்டு-வெளிநாட்டுக் கொள்கைகளைச் சாடினார்.

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"நான் 1967 வரை காங்கிரசுக்காரனாகவே இருந்தேன்; அதற்காக வருந்துகிறேன். பத்தாண்டுக் காலத்துக்கு முன்னரே நான் காங்கிரசைவிட்டு விலகியிருக்கவேண்டும்.

ஐந்து காரணங்களுக்காக நான் காங்கிரசை விட்டு விலகினேன்---

காங்கிரசில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் போலிகளேயாவர்.

சில காங்கிரசு அமைச்சர்கள், பதவியின்மூலம் பெரும் பணக்காரர்களாகியிருக்கிறார்கள்.

கட்சித் தலைவர்கள் தேர்வில் ஒருவருககொருவர் வெற்றிபெறாமலிருக்கச் சதி செய்து கெடுக்கிறார்கள்.

இதெல்லாம் போதாதென்று பெரிய நிறுவனங்களிடமிருந்து பண உதவியைக் காங்கிரசு பெற்றுக்கொள்கிறது; தேர்தலுக்கு இந்தப் பணம் செலவிடப்படுகிறது; இலஞ்ச ஊழலைக் காங்கிரசு ஊக்குவிக்கிறது.

தேர்தலுக்காகப் பெரிய நிறுவனங்களிடமிருந்து உதவி பெறலாம் எனக் காங்கிரசுத் தலைவர் சி. பி. குப்தா கூறியிருப்பது மிகவும் தவறானது.

காங்கிரசு நிர்வாகத்தில் சட்டமும ஒழுங்கும் மிகவும் கீழ்மட்டத்துக்குப் போய்விட்டது."

நாகர் தலைவர் சுடப்பட்டு மாண்டார்

பிழைக்க வைக்கும் முயற்சி பலனளிக்கவில்லை

சீன ஆதரவுக் குழு நபர் செயலின் விளைவு

கோகிமா, ஆக 5—

அடிவயிற்றை நோக்கி இருமுறை சுடப்பட்ட நாகா கலகக்காரர் தலைவர் கெய்டோ சாமா, நேற்றிரவு இங்குள்ள இராணுவ மருத்துவமனையில் இறந்தார்.

கோகிமா கடைவீதியில் அவர் ஏதோ சில பொருள்களை வாங்கிக்கொண்டிருக்கையில், 'சீன ஆதரவுக் குழுவைச் சேர்ந்தவர்' என நம்பப்படும் நபர் ஒருவர், இருதடவை அவரைச் சுட்டதாகத் தெரிகிறது.

கெய்டோ சாமாவைப் பிழைக்க வைப்பதற்காக உடனடியாக ஏழு புட்டி இரத்தம் செலுத்தப்பட்டது; எனினும் அவரைப் பிழைக்க வைக்க முடியவில்லை.

37 வயதுள்ள அவர், சீனா சார்புள்ள நாகா கலககாரர்களின் எதிரியாவார்.

தண்ணீர் வழங்கும் திட்டங்களுக்குப் பாங்கிகள் உதவி

தமிழக அரசு முயற்சி

திருச்சி, ஆக, 5—

"தமிழகத்தில், தண்ணீர் வழங்கும் திட்டங்களுக்குக் கடனுதவி அளிக்குமாறு சில முக்கிய பாங்கிகளைக் கேட்டுக்கொள்ளத் தமிழக அரசு எண்ணியிருக்கிறது; இந்தக் கடனுதவிகளுக்கு மாநில அரசு முழு அளவில் உத்தரவாதம் அளிக்கும்"

என்று நலத் துறை அமைச்சர் சாதிக் பாட்சா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:—

"சில முக்கிய பாங்கிகள், ஏற்கனவே விவசாயத் துறைக்குப் பெரும் அளவில் உதவி செய்து வருகின்றன; தண்ணீர் வழங்குவது போன்ற திட்டங்களை நிறைவேற்றவும் அவற்றின் உதவியை நாடுவதற்கு [illegible]

"அரசாங்க லாட்டரி மூலம் கிடைக்கும் நிகர வருமானத்திலிருந்தும் கணிசமான தொகை, பொது சுகாதாரத் துறைத் திட்டங்களுக்காகச் செலவிடப்படும்."

மருத்துவக் கல்லூரிக்கான மாணவர் தேர்வு

ஆகஸ்ட் 10ஆம் நாள் பட்டியல் அறிவிப்பு

சென்னை, ஆக. 5—

தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியல், ஆக. 10-ஆம் நாள் அறிவிக்கப்படும்

புதிதாகச் சேரும் மாணவர்களுக்கான வகுப்புகள், பட்டியல் வெளியான நாளுக்கு ஒரு வாரத்திற்குப் பின்னர் துவங்கும்.

செய்தியாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்த நலத்துறை அமைச்சர் திரு. சாதிக்பாட்சா மேலும் கூறியிருப்பதாவது:—

'சென்னை, மதுரை, கோவை, தஞ்சை ஆகியவைகளுக்காக நியமிக்கப்பட்ட நான்கு தேர்வுக் குழுக்களில், சென்னை தவிர இதர மூன்று இடங்களில், தேர் முடித்துவிட்டன; சென்னையில் நடைபெறும் பேட்டி, ஓரிரு நாட்களில் முடிந்துவிடும்.

மருத்துவக் கல்லூரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பொதுப் பட்டியல் ஒன்றை இக்குழுக்கள் அளிக்கும்.

பேட்டி காணப்பட்ட மாணவர்களின் மார்க்கு பட்டியல் சம்பந்தப்பட்ட வரையில், ஓராண்டுக்காலம் வரையில், அவைகள் வைத்திருக்கப்படும்.

தமிழகத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில், 1,100 மாணவர்களைச் சேர்க்கலாம்.

அரிசிக்கு உதவித் தொகை இல்லை

கேரளத்தின் கோரிக்கையை ஏற்க மறுப்பு

கொச்சி, ஆக. 5—

கேரளத்துக்கு மத்திய அரசு விநியோகம் செய்யும் அரிசிக்கு அளிக்கப்பட்டுவந்து தற்போது நிறுத்தப்பட்டிருக்கும் உதவித் தொகையை மீண்டும் வழங்கவேண்டும் என்ற யோசனையை மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம் ஏற்கவில்லை.

அரிசிக்காக வழங்கப்பட்டுவந்த உதவித் தொகையை கேரளத்துக்கு மட்டும் நிறுத்திவிடவில்லை என்றும், நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் நிறுத்தப்பட்டிருக்கிறது என்றும் செய்தியாளர்களிடையே பேசுகையில் அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்றுவிட்டு அதற்காக ஏற்படுகின்ற இழப்புத் தொகையை மத்திய அரசு கொடுக்கவேண்டும என்று கேட்பதாகவும் குறிப்பிட்டு, 'இதற்காக ஆகின்ற செலவை எந்த மாநிலத்திற்கும் வழங்கமுடியாது' என்றும் தெரிவித்தார்.

எனினும் இங்கு இறக்குமதி செய்யப்படும் அரிசிக்குக கொடுககப்பட்டுவரும் உதவித தொகை தொடர்ந்து அளிககப்பட்டு வருவதாகவும் நிருபர்களிடம் அமைச்சர் தெரிவித்தார்.

முன்னாள் இரஷ்யத் தளபதி மறைவு

மாஸ்கோ, ஆக. 5—

உலகப் பெரும் போரினபோது சோவியத் நாட்டின் பெரிய இராணுவத் தளபதியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த மார்ஷல் ரொகாஸ்வாஸ்கி, நேற்று மாஸ்கோவில் காலமானார்; அவருக்கு வயது 71.

ஸ்டாலின் காலத்தில், ரொகாஸ்வாஸ்கி, இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்றபோது வார்சாவுக்கு அனுப்பப்பட்டு 1956-வது ஆண்டுவரை போலந்து நாட்டின் பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார்.

இந்திக் காகச் சட்டம் வளைகிறது!

புதுடில்லி, ஆக 5—

"மோட்டார் கார்களின் பெயர்ப் பலகைகளின் எண்களை இந்தியில் எழுதிக்கொள்ளும் வகையில் சட்டத்தைத் திருத்தியமைக்க ஆலோசனை செய்து வருகிறோம்"

என, போக்குவரத்துத் துணையமைச்சர் பகத் தர்சன், நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"காரின் பெயர்ப் பலகையில் சட்டப்படி சர்வதேச எண்களை மட்டுமே பயனபடுத்த வேண்டும்; ஆனால் சிலர், இந்தி எண்களை எழுதியுள்ளனர்; இதற்காக அவர்கள்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை."

கபார்கான் பிறந்த நாள் விழா

இந்தியாவில் கொண்டாட ஏற்பாடு

புதுடில்லி, ஆக 5—

நாடாளுமன்றத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும்கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் அனைத்துக் கட்சி தேசியக் குழு, நாடு முழுவதும் கான் அப்துல் கபார்கானின் 79-வது பிறந்த நாளைக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறது.

"நாடு இந்தப் பெரியவருக்குச் செய்யவேண்டிய தனி மரியாதையின் முதல் கட்டமாக இதனைச் செய்யவேண்டியது கடமையாகும்' என்றும் அக்குழு கருதுகிறது.

காந்தி நூற்றாண்டு விழாவின் போது இவ்விழாவைக் கொண்டாடுவது எனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

வெளியேற்றப்படும் இலங்கைத் தமிழர்கள் நிலை

நிதி நிலை அறிக்கையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை

கொழும்பு, ஆக. 5—

இலங்கைப் பிரதிநிதிகள் அவையில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில், இலங்கையிலிருந்து வெளியேற்றப்படவிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றிய நிலை குறித்து எவ்விதக் குறிப்பும் இல்லாமலிருந்ததுகண்டு, இலங்கைத் தமிழர் தலைவர்கள், பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தியா—இலங்கை ஒப்பந்தப்படி, இலங்கையிலிருந்து வெளியேறும் இலங்கைத் தமிழ் அகதிகள் எடுத்துச் செல்லும் நாணய மாற்று விகித அளவு பற்றிய குறிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் காணப்படவில்லை.

தற்போது இலங்கை நாணய மாற்று விகிதம், இந்தியச் செலாவணியில் 45 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது; அகதிகள் சம்பந்தப்பட்டவரையில் இந்த விகித உயர்வு, நிதிநிலை அறிக்கையிக் தவிர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

எதிரிகளைத் தேடிக்கொண்டதுதான் கண்ட பலன்!

நமது வெளிநாட்டுக் கொள்கை வெற்றி பெற்றது எப்போது?

பிச்சைப் பாத்திரம் ஏந்திச் செல்லும் நிலையாவது ஒழிந்ததா?

நாடாளுமன்ற மேலவையில் தில்லை வில்லாளன் இடித்துரை

“ கூட்டுச் சேராக் கொள்கை என்பது, எங்கும் -- எப்பொழுதும் துணைவர்களை இழப்பதும், விரோதிகளைப் பெறுவதும் என்பதல்ல!

“ இந்த இருபதாண்டுகளில் ‘இந்த நண்பரைப் பெற்றோம்—அந்த நண்பரைப் பெற்றோம்’ என்று எண்ணிக் காட்ட முடியவில்லை; ஆகவேதான், அக்கொள்கையில் எங்கோ ஓட்டை இருக்கிறது; அது கண்டுபிடிக்கப்பட்டு நிவர்த்திக்கப்பட வேண்டும். இது இல்லாமல் மேலும் அதனைப் பின்பற்றுவது கூடாது; நமது வெளிநாட்டுக் கொள்கை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியிருக்கிறது ”

என்று, நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் பேசுகையில் வற்புறுத்தினர். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது :—

உணர்ச்சிக்குப் பலியாகாமல் ‘அறிவு’டன்: ஆராய வேண்டும்

“ பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுதம் வழங்கும் பிரச்சினை, மிகவும் முக்கியம்வாய்ந்தது; இதனை உணர்ச்சிக்குப் பலியாகாமல் அறிவு ஆட்சிசெய்யும்வகையில் விவாதிக்கவேண்டும்; ‘வெப்பமின்றி -- ஒளி நிரம்பிடும்வகையில் விவாதம் அமையவேண்டும்’ என்பது என் வேண்டுகோள்.

ஏனெனில், இந்தப் பிரச்சினை இரஷ்யா — இந்தியா — பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளைப் பற்றியது. இந்தப் பிரச்சினையை மூன்று கோணங்களிலிருந்து நாம் பார்க்கவேண்டும்.

பிரச்சினை, நண்பர்—நாம்—எதிரி ஆகியோரைப்பற்றி அமைந்துள்ளது.

உண்மையான பிரச்னை --- நிலைமைகள் என்ன?

உண்மையான பிரச்சினை என்ன -- நிலைமை என்ன என்பவைகளை அறிக்கையிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம்.

தலைமையமைச்சர், ‘நான் ஏற்கனவே வெளிப்படையாக ‘பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுதம் வழங்க விரும்புவது குறித்து இவ்வரசின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளேன்’ என்றும், வேறொரு இடத்தில், ‘மூன்று வாரங்களுக்குமுன்புதான் பாகிஸ்தானுக்கு இரஷ்யா, சில ஆயுத வகைகளை வழங்கிட விரும்புகிறது என்பதற்கான குறிப்பு நமக்குக் கிடைத்தது’ என்றும் கூறியிருக்கிறார்.

முதலில், ‘விரும்புகிறது’ என்று சொல்லப்பட்டது; பிறகு, ‘குறிப்பு’ -- ‘சில ஆயுத வகைகள்’ என்பன சொல்லப்பட்டுள்ளன; பிறகு, ‘இன்னும் இரஷ்யா, பாகிஸ்தானுடன் எந்த விதமான ஒப்பந்தம் செய்துகொள்ள இருக்கிறது -- எந்த வகை ஆயுதங்கள் -- எவ்வளவு ஆயுதங்கள் -- அதற்கான நிபந்தனைகள் எதுவும் நமக்குத் தெரியவில்லை’ என்று கூறப்பட்டுள்ளது. இதுதான் நிலைமை.

விருப்பக் கட்டத்தில் இருக்கும் நிலை மாறலாம்

ஒரு காரியம் அல்லது செயல் நடைபெறுகிறது என்றால், அதற்கு நான்கு கட்டங்கள் தாண்டவேண்டும்; முதலில்—விருப்பம்; பிறகு—தயாரிப்பு; அதன்பிறகு—முயற்சி; கடைசியிலதான்—செயல்.

ஆகவே, நாம் முதல் கட்டத்தில் இருக்கிறோம்; அதாவது, விருப்பக் கட்டத்தில் இருக்கிறோம்.

அந்த விருப்பம் மாறலாம்—வேறு விருப்பமாக மாற்றவும்படலாம்.

அதனால்தான், ஆரம்பத்திலேயே உணர்ச்சிக்குப் பலியாகாமல் அறிவுக்கு இடந்தர வேண்டினேன்.

இரஷ்யர், விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்; அப்படித்தான் அறிக்கை கூறுகிறது. அது மட்டுமல்ல; அந்த விருப்பமும் நிலையானதல்ல; ஏனெனில், தலைமையமைச்சர் ‘விருப்பத்திற்கான குறிப்புதான் தெரிகிறது’ என்று கூறியுள்ளார்.

அந்தக் குறிப்பு உண்மையாகவும் இருக்கலாம் — பொய்யாகவும் இருக்கலாம்; மாறலாம்—மாற்றப்படலாம்.

தலைமையமைச்சரின் அறிக்கைப்படி, பிரச்சினை முதல் படியில் உள்ளது.

உத்தரவிட இயலுமா?

இரஷ்யா ஒரு தனி நாடு; அரசியல்—வணிகத் துறையில் எந்த முடிவு எடுக்கவும் அதற்கு உரிமை உண்டு; எந்தப் பிரச்சினை பற்றியும், எவ்விதத் தீர்ப்பும் அது எடுக்கலாம்.

இரஷ்யா, ‘இதைச் செய்யவேண்டும்; இதைச் செய்யக்கூடாது’ என்று நாம் உத்தரவிட முடியாது.

1964-ல் இரஷ்யா நமக்கு ஆயுதம் வழங்கத் தயாராக இருந்தது; நம்முடன் நட்புடன் இருக்க விரும்பியது; இப்பொழுது, அந்நாட்டு நலக்திற்காக---அந்நாட்டுப் பிரச்சினையில்--எம்முடிவு எடுக்கவும் அது உரிமை பெற்றிருக்கிறது.

உண்மைநிலை அதுவா?

உலகத்தில் எத்தனையோ நாடுகள் உள்ளன; ஒரு நாடு இன்னொரு நாட்டிற்கு ஆயுதம் வழங்குகிறது; உணவும் தருகிறது; அவைகளைப் பற்றியெல்லாம் நாம் அக்கறைப்படவில்லை.

ஆனால், இரஷ்யா உலகத்தின் ஒரு சக்தியின் பிரதிநிதி; இரஷ்யாவை நாம் நமது நண்பராகக் கருதிவந்தோம்; அது, ‘நமக்கு மட்டுமே நண்பன்; மற்றவர் ஒருவருக்கும் நண்பனில்லை’ என்று தவறுதலாகக் கருதும்படி செய்யப்பட்டோம்! அது உண்மையான நிலையல்ல!

தாஷ்கண்ட் ஒப்பந்தக் காலத்தில் கூட, ‘இரஷ்யா இந்தியாவின் நண்பன்; பாகிஸ்தானின் நண்பனல்ல’ என்று சொல்ல முடியாமலிருந்தது!

இரஷ்யா, ஒரு பஞ்சாயத்துக்காரரின் நிலையில் இருந்தது; இரு நாடுகளின் நண்பராகத்தான பஞ்சாயத்தார் இருக்கமுடியும்.

பஞ்சாயத்தார் ஒரு நாட்டின் நண்பராகவும், மறுநாட்டின் விரோதியாகவும் இருக்கமுடியாது.

அப்படியிருந்தால், சமரசம் நடைபெறாது-- வெற்றியும் அடையாது.

எனவே, நடுவில் இருப்பவர், இருவரின் நண்பராகவே இருக்க வேண்டும்.

அரசியல் தந்திரம் வற்றிப் போய்விட்டதா?

ஆகவேதான், ‘இரஷ்யாவின் முடிவையோ, விருப்பத்தையோ நாம் எதிர்த்துக் கேட்க வழியில்லை’ என்கிறேன்; ஆனால் என்னுடைய குற்றச்சாட்டு—நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையும், அரசியல் நுட்ப அறிவும் பற்றியது ஆகும்.

அரசியல் நுட்ப அறிவில் நமது ஆட்சியாளருக்கு குறையில்லை; ஆனால் உள்நாட்டு விவகாரத்தில், காங்கிரசல்லாத எதிர்க் கட்சிகள் ஆட்சி செலுத்தும் மாநிலங்களில் ஆட்சிக் கவிழ்ப்பிலும், குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவருவதிலும், இடைக்காலத் தேர்தல் நடத்துவதிலும் அதிக அளவில் செலவிடப்பட்டதால், அங்க அரசியல் தந்திரம் வற்றிப்போய் விட்டது!

அரசியல் தந்திரத்தில் குறைவு ஏற்பட்டுள்ளதற்காகவே நான் இவ்விதம் குற்றஞ்சாட்டுகிறேன். உண்மையான இராசதந்திரம் இருக்குமானால், இரஷ்யாவிடம் இந்த மாற்றம் ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

இரஷ்யாவைக் குறைகூற வழியில்லை; ‘வெளிநாட்டு விவகாரத்தில் இராசதந்திரம் தோற்றுவிட்டது’ என்று நம்மை நாமே குறைகூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது

ஏற்பட்டுள்ள நிலைமையிலிருந்து நாம் பெறவேண்டிய பாடம் இதுதான் — இனி வெளிநாட்டார் உதவியின்றி—குறுக்கீடின்றி நாம் வாழ, நம் நாட்டைத் தயார் செய்ய வேண்டும்.

உணவுக்காகவோ, ஆயுதங்களுக்காகவோ பிச்சைப் பாத்திரம் ஏந்தி உலகத்தைச் சுற்றிவந்தால், நம் நாட்டிற்கு உலகத்தில் மதிப்பு இருக்காது.

சுதந்தரம் பெற்று இருபதாண்டுகள் ஆகிவிட்டன! நம் நாட்டைத் தயார் செய்யவேண்டும்—இன்னமும் பிச்சைப் பாத்திரம் ஏந்தலாமா? அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். நம் நாட்டைப் பற்றி மீண்டும் சிந்தித்து—செம்மைப்படுத்த வேண்டும்.

ஒரு கொள்கை வெற்றியடைகிறது என்றால், அறன்மூலம் நமக்கு நண்பர்கள் கிடைக்க வேண்டும் -- எதிரிகளைப் பெறுவதல்ல! நமது நாட்டு எல்லையில் எதிரிகளை நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ளோம்.

இருபதாண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தான் நமக்கு எதிரி—நாம் கொண்டுள்ள கொள்கை வெற்றிகரமானதென்று எப்படிச சொல்வது?

பாகிஸ்தான் மும்முறை தாக்கி விட்டது!

சீனா நம் நாட்டுக்கு ஊடுநவி உள்ளது—இந்நிலையில், எப்படி வெற்றிகரமான கொள்கை என்று கூறுவது?

இதற்கு வழி கண்டாக வேண்டும்; அது இல்லாமல், நாம் தொடர்ந்து அதே கொள்கையைப் பின்பற்ற இயலாது.”

காங்கிரசாரின் வேடம் கலைகிறது!

நன்கொடைத் தடை மசோதா கைவிடப்படும்?

‘ருசி கண்ட பூனை’களின் முயற்சி தொடர்கிறது

‘சனநாயக’த்தைக் காப்பாற்றவே நன்கொடை பெறப்படுகிறதாம்-- அரசியல் தலைவர்கள் தரத்தைக்காக்க அனுமந்தையா வற்புறுத்தல்

புதுடில்லி, ஆக. 4—

“ நாட்டில் பல பண்டங்கள் விற்பனை செய்யப்படுகின்றன; அவற்றுக்குத் தரம் எதுவும் இல்லை; நனகொடைகளின மூலம் அரசாங்கததினிடம் கம்பெனிகள் பெறும் செல்வாக்கு இதற்கு ஓரளவு காரணமாகும்.

“ அரசாங்கம், தலைவர்களின் தரத்தை உயர்த்துவதன் மூலம்தான் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும் -- பணத்தின் மூலமாக அல்ல!”

என்று, நிர்வாகச் சீர்திருத்தக் குழுத் தலைவர் திரு. கே. அனுமந்தையா, இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் சுட்டிக்காட்டினர்.

“ அரசியல் காரியங்களுக்காகக் கம்பெனிகள் நன்கொடைகள் அளிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்ற தனது கருத்தை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்” என்ற முயற்சிக்குப் பல காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு திரட்டிவருகிறார்களாம்.

இந்த மசோதாவைத் திருத்துவதற்குச் சில ஆலோசனைகள் கூறப்படுகின்றன. எல்லாக் கம்பெனிகளையும், ‘நன்கொடை அளிக்கக் கூடாது’ என்று தடை செய்வதைவிட, இலாபகரமாக நடைபெறாத கம்பெனிகளை மட்டும் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை தராமல் தடை செய்யலாம் என்பது ஒரு யோசனையாம்.

இப்போது உள்ள சட்டப்படி கம்பெனிகள் தமது இலாபத்தில் 5 சதவிகிதமோ அல்லது ரூ. 25,000-மோ நன்கொடையாக அளிக்கலாம்; அதாவது, நட்டத்தில் உள்ள கமபெனிகள்கூட ரூ. 25,000 வரை நன்கொடை தரலாம்.

இங்கு நடைபெற்ற ஒரு விவாதத்திற்குத் தலைமைவகித்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுத் தலைவர் திரு. கே. அனுமந்தையா, கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைக் கடுமையாக எதிர்த்தார்; மக்களே கட்சிகளுக்கு உதவ வேண்டும்; அதுதான் விரிவான சனநாயகம் ஏற்படுவதற்கு வழி வகுக்கும்’ என்று அவர் கூறினார்.

திரு. அனுமந்தையா தலைமையில நடைபெற்ற இந்த விவாதத்தில் 12 பேர் பங்குகொண்டனர்; காங்கிரசு, ஜனசங்கம், சுதந்திரா ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், சில தொழிலதிபர்களும், முன்னாள் ஐ. சி. எஸ். அதிகாரி ஒருவரும் இதில் பேசினர்.

அவர்களில் பெரும்பான்மையினர், கம்பெனிகள் நன்கொடை அளிப்பதை ஆதரித்தனர்.

முன்னாள் மத்திய அமைச்சர் மனுபாய் ஷா உள்ளிட்ட சிலர், ‘கம்பெனிகள் நன்கொடை தடை மசோதாவைத் திருத்த வேண்டும்’ என்று கூறினர்; ‘ஒரு கம்பெனி அளிக்கக்கூடிய நனகொடைக்கு உச்சவரம்பு விதித்து, சனநாயகத்தில் பணநாயக அபாயம் ஏற்படாமல் தடுக்க வேண்டும்’ என்றனர்.

திரு. பாபுபாய் எம். சினாய், திரு. ராமனுத் போதார் போன்ற தொழிலதிபர்கள், ‘இந்த மசோதாவைத் திரும்பப் பெற வேண்டும்’ என்று விரும்பினர்; ‘சனநாயகம் தழைப்பதற்காகத்தான் கம்பெனி நன்கொடைகள் அளிக்கப்படுகின்றன’ என அவர்கள் கூறினர்.

“அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பது சனநாயகத்தில் தனி மனிதருக்கு உள்ள உரிமையாகும்” என்று திரு. சினாய் கூறினர்.

“தேர்தல் செலவுகள் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டேபோகின்றன; இந்த நிலைமையில், பண உதவி இலலாமல் ஒருவர் வேட்பாளராகப் போட்டியிடுவது இயலாது” என்று திரு. என். தண்டேகரும், திரு. போதரும் குறிப்பிட்டனர்.

“சனநாயகம் தழைப்பதற்குத் தேர்தல்கள் அவசியமானல், அவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு நிதியுதவி செய்வது இயற்கையாகவே அத்துடன் சேர்ந்துவருவதாகும்; நன்கொடைகள் தருவதற்கு முதலாவது குறிக்கோள் சனநாயக நலனதான. எந்த அரசியல் கட்சிக்குத் தருவது என்பது இரண்டாவது அம்சமே” என்றார் தொழிலதிபர் திரு. போதார்.

“அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை தருவதற்கு முன்பாக அதற்குக் கம்பெனியின் பங்குதாரர்களுடைய ஒப்புதலைப் பெற வேண்டும்” என்று சிலர் யோசனை தெரிவித்தனர்.

“அரசியல் கட்சிகளுக்குத்தான் நன்கொடை தரவேண்டும்; தனி நபர்களுக்குத் தரக்கூடாது” என்றும் ஒரு யோசனை கூறப்பட்டது.

“இந்தியாவில் சனநாயகம் இளமைப் பருவத்தில் உள்ளது; இந்த நிலைமையில் நன்கொடைகளைத் தடை செய்வது விரும்பத்தக்கதல்ல” என்று திருமதி சுசேதா கிருபளானி, திரு. பால்ராஜ் மதோக் ஆகியோர் கூறினர்.

“கம்பெனிகள் நன்கொடை அளிப்பதைத் தடை செய்துவிட்டால், வெளிநாட்டுப் பணம் நுழைந்துவிடும்; அதனால், நம்முடைய கொள்கைகள் பாதிக்கப்படும்; கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைவிட, இதுதான் சனநாயகத்திற்கு மாபெரும் அபாயமாகும்” என்றார் திரு. மதோக்.

“அரசாங்கம் நன்கொடைகளைத் தடைசெய்யும் மசோதாவைக் கொண்டு வந்துள்ளதற்குக் காரணம் சோஷலிச செல்வாக்குதான்” என்றார் மதோக்.

நாடாளுமன்ற சுயேச்சை உறுப்பினர் ஏ. டி. மணி பேசுகையில், ‘அரசாங்கமே தேர்தல் செலவுகளுக்குப் பணம் தரலாம்; இதன் மூலம் கம்பெனி நன்கொடைகளை நம்புவது சிறிது சிறிதாக அகலும்’ என்றார்; ‘அது நடக்காத காரியம்’ என்று திரு. மனுபாய் ஷா, திருமதி சுசேதா கிருபளானி ஆகியோர் கூறினர்.

பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்பதை திருமதி கிருபளானி ஒப்புக்கொண்டார்; ‘நடைமுறையில் அது சிரமமானது’ என்று திரு. மனுபாய் ஷாவும், மற்றவர்களும் கருதினர்.

திரு. அனுமந்தையாவைத் தவிர முன்னாள் ஐ.சி.எஸ். அதிகாரியான திரு. சி. சி. தேசாய் ஒருவர்தான், ‘கம்பெனிகள் நன்கொடைகள் கூடவே கூடாது’ என்று எதிர்த்தார்.

தேர்தல் செலவுகள் கூடியுள்ளன என்பதையும், கம்பெனிகள் நேரடியாக நன்கொடை அளிப்பதைத் தடை செய்துவிட்டால் கள்ளப்பணம நன்கொடையாக அளிக்கப்படும் என்பதையும், திரு. தேசாய் ஒப்புக்கொள்ளவில்லை; ‘பிரதிபலன் எதிர்பார்க்காமல் எவரும் எதையும், தருவது இல்லை: ஆகவே, கம்பெனி நன்கொடைகள ஒழுங்கற்றவை; அவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்’ என்றார் அவர்.

'பட்ட பாட்டுக்குப் பலன் கிடைக்கத் தொடங்கியுள்ளது'

'அதனைப் பாழ்படுத்தும் திட்டத்துக்கு இடந்தர இயலாது'

உணவு அமைச்சர் மதியழகன் உறுதி -- விளக்கம்

திருச்சி, ஆக. 2—

"ஒவ்வொரு மாநிலமும் தனி உணவு மண்டலங்களாக உள்ள ஏற்பாட்டை அகற்றத் தமிழக அரசு ஒப்புக் கொள்ளாது; தற்போதுள்ள இந்த உணவு மண்டல ஏற்பாட்டைப் பரிசீலிக்க இது சமயமல்ல என்று தமிழக அரசு கருதுகிறது. பங்கீட்டு முறையை நீக்கவும் தமிழகம் ஒப்பாது"

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், தமிழக அரசின உணவுக் கொள்கையைப்பற்றி விளக்குகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"மாநிலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க தமிழக அரசு இப்போது பாடுபட்டு வருகிறது. புதிய அரசு பதவி ஏற்ற பிறகு, உணவுத் தானியங்கள் பதுக்கல், கடத்தல்களைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு, விநியோகிக்கும் ஏற்பாடும் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. எங்களது முயற்சிகளுக்கு இப்போதுதான் பலன்கள் கிட்ட ஆரம்பித்துள்ளன.

மேலும், பற்றுக்குறையாகஉள்ள கேரளம் அண்டை மாநிலமாகும். எனவே, இத்தருணத்தில் தனி மாநில உணவு மண்டலத்தை அகற்றுவது நல்லதல்ல; ஆகவே, நடைபெறவிருக்கும் முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழகம் தனது நிலையை வலியுறுத்தும்.

மூன்றாண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் கோதுமை மாவு மில்களுக்கு இம்மாதம் முதற்கொண்டு போதிய அளவு கோதுமை கிடைக்க ஆரம்பித்துள்ளது.

தமிழகத்துக்கான மாதந்திர கோதுமை ஒதுக்கீடு 19,000 டன்னிலிருந்து 30 000 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.

வரும் குறுவை அறுவடைக் காலத்தில் கொள்முதல் முறையில் மாறுதல் இராது."

தி. மு. க. வழக்கறிஞர் இரண்டாவது மாநாடு

வ. கு. தலைவர் வேண்டுகோள்

அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழகத் தி. மு. கழக வழக்கறிஞர்களின் இரண்டாவது மாநாட்டினை 18—8—68 அன்று கடலூர் நகராட்சிமன்ற அரங்கில் நடத்த கடலூர் வழக்கறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். எஸ். சுந்தரம் பி.ஏ.பி எல். அவர்களை வரவேற்புக் குழுத் தலைவராகவும், ஆர். சோமசுந்தரம் பி எஸ்சி. பி.எல்., விழுப்புரம் பி. மேகநாதன் பி.ஏ.பி.எல். ஆகியோரை செயலாளர்களாகவும், ஏ. வேல்முருகன் பி.காம்.,பி.எல். அவர்களைப் பொருளாளராகவும், மற்றும் பல வழக்கறிஞர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட வரவேற்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டினை, மதுரை கு. திருப்பதி பி.ஏ.பி,எல். திறந்துவைக்கிறார்.

தஞ்சை பா. மாணிக்கவாசகம் பி.ஏ.பி.எல். தலைமைவகிக்கிறார்.

முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களும், பொதுப் பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி, சட்ட அமைச்சர் திரு. எஸ் மாதவன், சுகாதார அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோரும், மற்றும் வழக்கறிஞர்கள் இரெ.இளம்வழுதி எம்.எல் ஏ, வி. கிருஷ்ணமூர்த்தி எம் பி., தில்லைவில்லாளன் எம்.பி. ஆகியவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவிருக்கிறார்கள்.

இதுவரையில் பதிவுசெய்து கொள்ளாத கழக வழக்கறிஞர்கள், 'மாநாட்டுச் செயலாளர் ஆர். சோமசுந்தரம் பி.எஸ்சி, பி.எல், 16-பி, இராமதாஸ் நாயுடு தெரு, கடலூர்-1' என்ற முகவரிக்கு உடனடியாக ரூ. 10 அனுப்பிப் பதிவு செய்து கொள்ளுமாறு வ. கு. தலைவர் சுந்தரம் பி.ஏ பி.எல். வேண்டுகிறார்.

திருக்குறளின் சிறப்பு

மத்திய அமைச்சர் விளக்கம்

கல்கத்தா, ஆக 3—

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் கலந்துகொண்ட மத்திய அமைச்சர் வி. கே. ஆர். வி ராவ், திருக்குறளைப் பற்றிக் கூறியதாவது :—

"தென்னாட்டின் ஆதி நாகரிகத்தையும், மொழி வளத்தையும், பெரும் கலாச்சாரத்தையும் மெள்ள மெள்ள இந்தியாவின் பிற பகுதியினர் புரிந்துகொள்ளத் தொடங்கி விட்டனர்.

"தமிழிலுள்ள மிகச் சிறந்த கருத்து இலக்கியம் திருக்குறள்; திருக்குறளை உரையுடன் ஊன்றிப் படிக்கும் போது அதிலுள்ள தத்துவம் —வேதாந்தம்— அன்றாட வாழ்க்கை நெறிகள் நமக்கு பிரமிப்பூட்டுகின்றன. அத்தனையும் அழகான எளிய மொழியில் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் ஆக்கப்பட்டுள்ளன."

தஞ்சையில் பால் பதனத் தொழிற்சாலை

அமைச்சர் மதியழகன் பங்கேற்பு

தஞ்சை, ஆக. 5—

கூட்டுறவுப் பால் பதனத் தொழிற்சாலை ஒன்றை உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இங்கு துவக்கிவைத்தார்.

நாளொன்றுக்கு 16 ஆயிரம் லிட்டர் பாலை இத்தொழிற்சாலை பதனப்படுத்தும்.

கால்நடை உணவு உற்பத்திக்கான தொழிற்சாலை ஒன்றை விவசாய அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி திறந்து வைத்தார்.

விழாவில் பங்குகொண்ட பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி பேசுகையில் 'கூட்டுறவு நிறுவனங்களில் மக்கள் நம்பிக்கை இழந்துவருவதால், தொழிற்சாலை நிர்வாகிகள் எச்சரிக்கையாக இருந்து இலாபம் அல்லது நஷ்டம் இல்லாத அடிப்படையில் நடத்தி வரவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

வல்லுநர்கள் திறமைக்குப் பலன் என்ன உண்டு?

குறிக்கோள்களை வகுத்து செயல்படுவது அவசியம்

சென்னை, ஆக. 3—

"பலதரப்பட்ட மக்களைக் கொண்ட மனித சமூகத்தை, 'அரசு' என்கிற இயந்திரத்தை -- மிகச் சக்தி வாய்ந்த அரசு என்கிற இயந்திரத்தைக் கொண்டு மட்டும் ஆளமுடியாது; மனிதனுடைய பலதரப்பட்ட நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் முடியாது.

"மனிதர்களை வழிநடத்தும் அமைப்புக்கள், சமூகம் முழுவதும் பரவிக்கிடக்க வேண்டும். ஒரு செயலில் மனிதனை ஈடுபடுத்திய பிசுபுதான் அவனுடைய திறமையை ஒரு சர்வாதிகார அரசு உணருகிறது.

"ஆனால், சமூகம் சுதந்தரமாக இருக்கிற இடத்தில், சக்தி வாய்ந்த அரசு -- சக்தி வாய்ந்த தலைமை ஆகியவற்றின் உத்தரவு செல்லுபடியாவதில்லை.

"ஒன்றுக்கொன்று மாறுபட்ட மனித நடவடிக்கைகள் இப்போது வெளித்தெரியத் துவங்கியுள்ளன.

"வளருகின்ற உலகத்தில் கீழ் மட்டத்தில் இருக்கின்ற அமைப்புகளுக்கு அதிக உரிமைகள் வழங்க வேண்டியது அவசியமாகும்.

"நம் நாட்டுப் பொறியியல் வல்லுநர்களின் திறமைக்கு ஏற்ற பணி தரப்படவில்லை. நம் நாட்டுக்குப் பயன்தரும் வகையில் குறிக்கோள்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

"மலிவு விலையில் ஸ்கூட்டர் தயாரிப்பது -- பத்தாண்டுகளுக்குள் கிராமங்களுக்கெல்லாம் டெலிவிஷன் பரவுமாறு செய்வது -- இப்படிச் சில குறிக்கோள்களை வகுத்துக்கொண்டு, இதற்கெல்லாம் ஒரு துணை முறையைக் கண்டுபிடித்துச் செயல்பட வேண்டும்.

"அப்படிப்பட்ட பொருள் அமைந்த வாழ்க்கையாக இங்கு பட்டம் பெற்ற நிபுணர்களின் வாழ்க்கை அமைய வேண்டும்."

—இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் அணுசக்திக் குழுத் தலைவர் டாக்டர் விக்ரம் சாரா பாய்.

செயற்கைப் பசு!

கன்றுகுட்டி இல்லாமலேயே பசுவிடமிருந்து பாலைக் கறந்து கொள்ள தோலில் வைக்கோலைத் திணித்து 'செயற்கைக் கன்றுக்குட்டியை'த் தயாரிப்பது நமது நாட்டின் நடப்பு.

ஆனால் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில், பசு இல்லாவிட்டாலும் கன்றுக் குட்டிகளுக்குப் பால் கிடைக்கச் செய்வதற்காக, 'செயற்கைப் பசு' வைத்திருக்கிறார்கள்!

வெறும் இயந்திரமான இந்த செயற்கைப் பசுவினுள் நீரையும், பால் பொடியையும நிரப்பி ஒரு குறிப்பிட்ட வெப்ப அளவில் தரமான பால் தயாரிக்கப்படுகிறது. அந்தப் பாலை பல்வேறு ரபபர் குழாய்களின் வழியாக கன்றுக் குட்டிகள் உறிஞ்சிக் குடித்து தாய் இல்லாக் குறையை மறந்து மகிழ்கின்றன!

சிவகாசி மஜீத் நினைவு மன்ற ஆண்டுவிழா

சிவகாசி மஜீத் நினைவு மன்ற நான்காவது ஆண்டுவிழாப் பொதுக்கூட்டம், 25—7—68 அன்று பாவடித்தோப்பு திடலில் தோழர் எஸ். ஏ. ரசாக் தலைமையில் நடைபெற்றது.

தோழியர் ஏ. பி. மனோன்மணி, தோழர்கள் அபு தாலிப், வட்டச் செயலாளர் மணியம், கே. வி. இராசன், மணிமாறன், ஆறுமுகம், மதார் ஆகியோர் கழக ஆட்சியின் சாதனைகளை விளக்கிப் பேசினர்.

இந்திய எல்லை அடைக்கப்படுகிறது

புதுடில்லி, ஆக. 3—

சீனாவுக்குச் சென்றுள்ள நாகர்கள் குழு இந்தியாவுக்குத் திரும்புவதைத் தடுக்கும்பொருட்டு, இந்தியா—பர்மா எல்லையை இந்திய அரசு அடைத்துவிட்டது இன்று முதல் இது அமுலுக்கு வந்திருக்கிறது.

வடகிழக்கு எல்லைப்புற நிலைமை பற்றி நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க் கட்சித் தலைவர்களுடன், தலைமையமைச்சர் நடத்திய ஆலோசனையின்போது இத்தகவல் வெளியிடப்பட்டது.

எல்லையையொட்டி 25 மைல் தொலைவுக்குள் உள்ள பகுதியில யாரும் போகக் கூடாதென்று கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது.

எல்லையைக் கடந்து செல்ல யாராவது விரும்பினால், 'பாஸ்போர்ட்' விதிகளின்கீழ் அனுமதி வாங்கிச் செல்லவேண்டும்.

உணவு தானியம் ஏற்றுமதியாகுமா?

புதுடில்லி, ஆக. 4—

"நடப்பு ஆண்டில் உணவுத் தானியம எதையும் ஏற்றுமதி செய்ய அரசு உத்தேசிக்கவில்லை; ஆனால், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் உணவுத் தானியங்களை நாம் ஏற்றுமதி செய்வோம்"

என்று நாடாளுமன்ற மேலவையில், உணவு அமைச்சர் செகசீவன்ராம் தெரிவித்தார்.

"நல்ல விளைச்சல் கண்டிருப்பதால், இந்த ஆண்டு உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?' என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இவ்வாண்டு ஜூன், ஜூலையில் தாய்லாந்து அரசுடன் 1.2 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வாங்க இந்தியா ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாக உணவுத்துறைத் துணை அமைச்சர் ஷிந்தே தெரிவித்தார்.

அரிசி வாங்குவதற்காகத் தாய்லாந்துடன் நீண்டகால ஒப்பந்தம் எதையும் அரசு செய்துகொள்ளவில்லை என்றும், ஏனெனில், உணவுத் தானியம் சம்பந்தமாக விரைவில் தன்னிறைவு பெற முயற்சி செய்துவருவதாகவும் துணையமைச்சர் கூறினார்.

சென்னை 9-வது வட்ட தாளமுத்து — நடராசன் நினைவு மன்றம்

14—7—68-ல், சென்னை 9-வது வட்ட தாளமுத்து நடராசன் நினைவு மன்ற நிர்வாகிகள் தேர்தல் திரு. வி. எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : எம். எஸ். மணி; செயலாளர் : எம். கே. சாமி; துணைச் செயலாளர் : எஸ். கணேசன்; பொருளாளர் : கே. முனுசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: அய்யாவு, ம. இராசன், மகாலிங்கம், சேசய்யன், ஏ. வி. முனுசாமி, கு. இராதாகிருட்டிணன், கோவிந்தசாமி, பி. சக்கரபாணி, டி. முனுசாமி.

இராசேந்திரன் நினைவு மன்றம்

சென்னை 9-வது வட்ட செட்டி தோட்டம் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் மன்ற நிர்வாகிகள் தேர்தல், திரு. வி. எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : எம். ஆனந்தன்; செயலாளர் : ஆ. நல்லதம்பி; துணைச் செயலாளர் : டி. முனுசாமி; பொருளாளர் : ஜி. முருகன்; செயற்குழு உறுப்பினர்கள்: உசேன், கரீம், ஆறுமுகம், மதுரை, முனிரத்தினம் முஸ்தபா, சந்தானராஜ், ரங்கநாதன், செல்வராஜ், கிருஷ்ணன், நாகூர் கனி.

மக்கள் தொகை கட்டுப்பாட்டுக்கு ஒத்துழைப்பு

பத்தாண்டு கடனுதவித் திட்டம்

வசதிபடைத்த நாடுகளிடமிருந்து பல உதவிகளைப் பெற்றுப் பின்தங்கிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அந்த வளர்ச்சியோடு கூடவே மக்கள் தொகைப் பெருக்கமும் பன்மடங்கு அதிகரித்துவருவதால், பிற நாடுகள் என்னதான் உதவினாலும் பின்தங்கிய நாடுகள் போதிய அளவு முன்னேற்றம் காண முடிவதில்லை.

எனவே, ஆக்கப் பணிகளுக்கான திட்டங்களைச் செயலாற்றுவதால் மட்டும் பொருளாதார வளர்ச்சி பெற்றுவிட முடியாது; அவற்றோடு கூடவே பின்தங்கிய நாடுகளின் பெருகிவரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும் வேண்டும் என்பதை உணர்ந்த மேற்கு ஜெர்மனி, ஆக்கப் பணிகளுக்கு உதவுவதைப்போலவே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும் உதவிபுரிய முன்வந்துள்ளது.

குறைந்த வட்டி விகிதத்தில் பத்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துவதற்கான கடனுதவித் திட்டம் அத்தகைய உதவிகளுள் ஒன்றாகும்.

மக்கள் தொகையின் பெருக்கத்தைக் கண்காணித்து-பத்தாண்டுகளுக்குப் பிறகு மக்கள்தொகை எந்த அளவுக்கு இருக்கும் எனக் கணித்து—அதற்கு ஏற்பவே உதவித் திட்டங்களை அமைக்கவேண்டும் என்று மேற்கு ஜெர்மனி முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பின்தங்கிய நாடுகளின் விவசாயத்துறை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். உணவு உற்பத்திக்கு நவீன தொழில் நுணுக்க ஒத்துழைப்பு அதிக அளவில் வழங்கப்படும். இன்றியமையாப் பொருள்களின் உற்பத்திக்கான தொழில்களுக்கு அதிகபட்ச உதவி செய்யப்படும்.

தற்சமயம் மேற்கு ஜெர்மனி ஆண்டுதோறும் 207 கோடி மார்க்குகள்வரை பின்தங்கிய நாடுகளுக்கான உதவித் திட்டங்களின் கீழ் வழங்கி வருகிறது. இந்தத் தொகை வெகு விரைவில் 5.5 சதவிகிதம் அதிகரிக்கப்படவிருக்கிறது.

சேலம் மாவட்ட தி.மா.மு.க. தோழர்கட்கு :

"சேலம் நகர -- வட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள தி. மா. மு க. கிளைகளும், புதிதாக அமைக்க உள்ள தோழர்களும், கீழ்க்கண்ட முகவரியில் என்னிடம் தொடர்புகொள்ள வேண்டுகிறேன்"

என, சேலம் மாவட்ட தி.மா.மு.க. அமைப்பாளர் மா. அய்யாசாமி பி.எஸ்சி. அறிவிக்கிறார்.

முகவரி :—மா. அய்யாசாமி பி எஸ்சி., அமைப்பாளர், சேலம் மாவட்ட தி. மா. மு. க., 17, குலசேகர ஆழ்வார் தெரு, சேலம்—1.

சென்னை 89-வது வட்ட அண்ணா படிப்பகம்

24—7—68-ல், வெள்ளீசுவரர் தோட்டம் காலனியில் உள்ள அண்ணா படிப்பகத்தின் நிர்வாகிகள் தேர்தல் டி. கே. கனகசபையை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

அவைத் தலைவர் : வி. முத்து; செயலாளர் : மா. செ. நாதன்; துணைச்செயலாளர் : கு. வ. மு. இராசு; பொருளாளர் : கே. கே. கோபி; 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

தோழர் ஜி. சீனுவாசன் அண்ணா படத்தைத் திறந்துவைத்தார். தோழர் பக்தவத்சலம் இனிப்பு வழங்கினார்.

அணுசக்தி நுணுக்க அறிவு

பாகிஸ்தானுக்குத் தந்துதவ செஞ்சீனு ஒப்புதல்

அதிக அளவில் இராணுவ உதவியும் அளிக்குமாம்

ஹாங்காங், ஆக 5—

தனது அணுசக்தி அறிவையும், மேலும் அதிக அளவில் இராணுவ உதவியும் பாகிஸ்தானுக்குத் தந்துதவ சீனு ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

சீனுவுக்கு வருகை தந்திருக்கும் பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர், கம்யூனிஸ்டுத் தலைவர்களுடன் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் இது முக்கியமானதாக இருக்கும் என நம்பப்படுகிறது.

பாகிஸ்தானுக்கு இரஷ்யா அளிக்கும் உதவியும், சீனு-பாகிஸ்தானுக்கிடையே புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதையும் விவாதத்தில் நிச்சயமாக இடம்பெறும் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தப் பாதையை விரைவில் போக்குவரத்துக்குத் திறந்துவிட வேண்டும் என்று சீனு கருதுகிறதாம். இப்பாதையில் இதுவரையில், தாராளமான போக்குவரத்து நடைபெறுவதில்லை.

கிழக்குப் பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் பாதுகாப்பு அரண்கள்

பாகிஸ்தான் படைகளின் மும்முரமானநடவடிக்கை

ஷில்லாங், ஆக. 4—

அசாம்-கிழக்குப் பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் படைகள், மும்முரமான ஆயத்தங்களில் ஈடுபட்டிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

அசாமின் கச்சார் மாவட்ட எல்லையில் பாதுகாப்பு அரண்களையும், அகழிகளையும், தற்காப்பு நிலையங்களையும் பாகிஸ்தான் படைகள் அமைத்துள்ளனவாம்.

முன்னணிப் பகுதிக்குச் செல்லுவதற்கு வசதியாகப் பல பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஜெட் ரக விமானங்கள் இறங்குவதற்கான முறையில் விமானத் தளங்கள் செப்பனிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இங்கிருந்த கிழக்குப் பாகிஸ்தான் துப்பாக்கிப் படையினருக்குப் பதிலாக, பலூசி, மற்றும் பஞ்சாப் படைப் பிரிவினர் இப்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

சில நாட்களுக்குமுன், கிழக்குப் பாகிஸ்தான் உள்நாட்டுப் பகுதியில், விமானத் தாக்குதல் ஏற்பட்டால் செய்யவேண்டிய முன்னெச்சரிக்கை ஒத்திகைகளையும் பாகிஸ்தான் நடத்தியிருக்கிறது.

ஜோர்டான் தளத்தின்மீது இஸ்ரேல் தாக்குதல்

டெல்லி சுவிங், 4—

"அராபிய நாசவேலைத் தளத்தை அழிக்கும் நோக்கத்துடன், இஸ்ரேல் படைகள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, ஜோர்டான் ஆற்றுக்கு அருகில் இன்று ஒரு போராட்டம் நடைபெறறது"

என்று இஸ்ரேலிய இராணுவத் தகவல் ஒன்று கூறுகிறது.

இஸ்ரேலிய போர் விமானங்கள் இன்று மதியம் எல்லையைக் கடந்து தாக்குதலைத் துவக்கியதாகவும், டாங்கிப் படைகளும், காலாட் படைகளும் இப்போரில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

தமிழகத்தின் கனிவளம்

கண்டுபிடிக்க நிபுணர்கள் திட்டம்

தமிழகத்தின் கனிவளங்களைக் கண்டறிய இரஷ்யா—பிரிட்டன்—கனடா—மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 9 சுரங்க இயல் நிபுணர்கள் குழு தமிழகத்திற்கு வருகிறது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மூன்றுண்டுகள்வரை இந்த நிபுணர் குழு, நில உட்கூறு ஆராய்ந்து கனி வளத்தைக் கண்டறியும்.

ஏற்கனவே இலண்டனைச் சேர்ந்த ஆய்வு நிறுவனம் ஒன்று, தமிழகத்தின் வட பகுதியை விமானம்மூலம் ஆய்வு செய்து முடித்திருக்கிறது; நிலத்தை அகழ்ந்து மாதிரி தாதுப் பொருட்களை எடுக்கவும், அவற்றைச் சோதனை செய்ய ஓர் ஆய்வுக்கூடம் அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடத் திறப்பு

சென்னை 92-வது வட்டம் காமராசர் காலனியில் உள்ள மாநகராட்சித் துவக்கப் பள்ளிக்கான புதிய கட்டிடத்தை கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்துவைப்பார்; இவ்விழா, 6—8—68 மாலை 5-மணிக்கு துணைமேயர் பவளவண்ணன் தலைமையிலும்—காஞ்சி மணிமொழியார் முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்பு: சா. கணேசன் எம்.சி.

பாரதிதாசன் இலக்கிய மன்றத் துவக்க விழா

அதிகாரப்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி பாரதிதாசன் இலக்கிய மன்றத் தொடக்க விழா, 7—8—68 பிற்பகல் 3-மணிக்கு திருவள்ளுவர் திறந்த வெளியரங்கில் நடைபெறும்; தலைமையாசிரியர் கொ. செங்கோடன் தலைமையில் புலவர் கு. வேங்கன் அண்ணு படத்தைத் திறந்து வைப்பார்; புலவர் பெ. சிதம்பரம் பாரதிதாசன் படத்தைத் திறந்துவைப்பார்; திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் சிறப்புரையாற்றுவார்.

பொதுக் கருத்தை உருவாக்கக் கூடிப் பேசிடுக!

பத்திரிகாசிரியர்கட்கு அண்ணு யோசனை

சென்னை, ஆக. 5—

"பத்திரிகை படிக்கும் பழக்கம் நாட்டில் அதிகரித்து வருவதால், உலகப் பிரச்சினைகளை அறிந்துகொள்ள வேண்டுமென்ற நாட்டம் மக்களிடையில் அதிகமாகக் காணப்படுகிறது; பத்திரிகைகளின் பொறுப்பும் அளவின்றிப் பெருகிவிட்டது.

"இந்நிலையில், அன்றாடப் பிரச்சினைகளுக்கு நியாயவாதத்தைச் சீராக வகுப்பதற்குப் பத்திரிகை ஆசிரியர்கள் அடிக்கடி கூடிக் கலந்துரையாட வேண்டும்; இத்தகைய கலந்துரையாடல்களினுல், பலதரப்பட்ட கருத்துக்கள்—எண்ணங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்; இதன்மூலம் செய்தித்தாள்கள் இன்னும் சிறந்த முறையில் மக்களுக்குப் பணியாற்றுவதற்கு வழிபிறக்கும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், கல்கத்தாவிலிருந்து வெளியாகும் 'அமிர்த பஜார் பத்திரிகா' நூற்றுண்டு விழாவினையொட்டி இங்கு நடைபெற்ற வரவேற்பில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

'ஆனந்த பஜார் பத்திரிகா' ஆசிரியர் துஷார் காந்தி கோஷ் பேசுகையில், 'பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட, நாடு சுதந்தரம் பெற்ற பின், பிரச்சினைகளை அலசுவதிலும், நம்முடைய சொந்த — தேர்ந்தெடுத்த அரசுகளைக் குறைகூறுவதிலும் சங்கடங்கள் நிறைய உள்ளன; விவாத முறையிலும், நியாய முறையிலும் எழுதுவதற்குப் பெரும் ஆராய்ச்சி தேவைப்படுகிறது' என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அண்ணு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :–

"பொதுவாக வழக்கத்திலுள்ள 'மதச் சார்பின்மை'—'வட்டார வாதம்'—'வகுப்பு வாதம்' போன்ற சொற்களுக்குப் பொருள் காண்பதிலும், விளக்குவதிலும் பெரும் தொல்லைகள் உள்ளன.

"எனவே, பத்திரிகைகளை நடத்தும் ஆசிரியர்கள்—நிர்வாகிகள் அடிக்கடி ஒன்றுகூடி, பிரச்சினைகளுக்கு விளக்கம் காண்பது—உரிமைகள், பொறுப்புக்கள் சம்பந்தமாகப் பொதுக் கருத்து காண்பது, பெரிதும் உதவியாக இருக்கும்."

50,900 பொறியியலாளருக்கு வேலையில்லை!

கேரளத்தின் நிலைமை

திருவனந்தபுரம், ஆக. 5—

"1970—71-ம் ஆண்டுவாக்கில் கேரளத்தில் சுமார் 50,900 பொறியியல் துறையினர் வேலையில்லாமலிருப்பர்"

என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின்மூலம் தெரியவந்திருக்கிறது.

பொறியாளர்களுக்கிடையில் வளர்ந்துவரும் இந்த வேலையில்லாத நிலைமையைச் சமாளிப்பது குறித்து மாநிலத் திட்டக் குழு ஆலோசனை செய்துவருகிறதாம்.

இந்தியால் இயலாது!

புகழ்மிக்க வழக்கறிஞர்கள் கருத்தறிவிப்பு

புதுடில்லி, ஆக. 5—

"உயர் நீதிமன்றங்களில் ஆங்கிலமே நிர்வாக மொழியாக நீடிக்க வேண்டும்; இந்தி மொழி அந்த இடத்திற்கு வர முடியாது; இப்போதுள்ள முறையை அப்படியே தொடர்ந்து பின்பற்றலாம்"

என்று இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் (சுப்ரீம் கோர்ட்) புகழ்மிக்க வழக்கறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்தியைத் திணிக்கும் போக்கு

மத்திய அரசின் முடிவை கேரள அரசு எதிர்க்கும்

திருவனந்தபுரம், ஆக 5—

"நாடு முழுவதிலுமுள்ள மத்தியப் பள்ளிகளில் இந்தியைப் பாடமொழியாக்குவதென மத்திய அரசு தீர்மானித்திருப்பதைக் கேரள அரசு எதிர்க்கும்.

"மத்திய அரசின் இம்முடிவு பிரச்சினைக்குரிய ஒன்றுகும்; இது பற்றித் தலைமையமைச்சருடன் பேசப் போகிறேன்"

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு அவர்கள், செய்தியாளர்களிடம் கூறுனர்.

தென்னுட்டில் ஏற்கனவே மத்தியப் பள்ளிகளில் — பெற்றோர்களின் எதிர்ப்பையும் மதிக்காமல்—ஆங்கிலத்தில் கற்பிப்பதைக் கைவிட்டிருப்பதும், சமூக அறிவு பாடத்தை இந்தியில் கற்பிக்கத் துவங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாவட்டக்கழகத்தேர்தல்

14--8--68: புதன்கிழமை

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணு அவர்களால் ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி, (தி. மு. க.) மாவட்டக் கழகத் தேர்தல் 14--8--68 அன்று சென்னை மாவட்டம் தவிர எல்லா மாவட்டங்களிலும் முறைப்படி நடைபெறும்.

மாவட்டக் கழக அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகிய பொறுப்புக்களுக்குப் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் — அதற்குரிய கட்டணத் தொகையான பத்து ரூபாயுடன் — விண்ணப்பத் தாள்களை 5 8—68-ம் நாளிலிருந்து 8—8-68-ம் நாள் மாலை 7-மணிக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்பிவைக்க வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வேட்பாளரை முன்மொழிபவரும், வழிமொழிபவரும், சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும்.

வேட்பாளர் விண்ணப்பத் தாள் தலைமைக் கழகத்திலும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் — வட்டக் கழகச் செயலாளர்கள ஆகியோரிடத்திலும் கிடைக்கும்.

'அறிவகம்', சென்னை-13
31—7—68

— தலைமைக் கழகம் (தி.மு.க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறநிலைய (நிர்வாகத் துறை) ஆணையாளர் முன்பாக

மனு எண் 136/68

நிர்வாக அதிகாரி,
ஸ்ரீ சௌரிராஜ பெருமாள் தேவஸ்தானம்,
திருக்கண்ணபுரம், நன்னிலம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்

—மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் திருக்கண்ணபுரம் ஸ்ரீ சௌரிராஜ பெருமாள் தேவஸ்தானம் விஷயமாக :—

மேற்படி தேவஸ்தானத்திற்குச் சொந்தமானதும் நன்னிலம் வட்டம் கோட்டூர் கிராமம் மறு சர்வே எண் 49/5-ல் அடங்கிய 0 65 செண்ட் அயன் நஞ்சை நிலத்தை அளித்துவிட்டு அதற்குப் பதிலாக மேற்படி கோட்டூர் கிராமத்தில் திருமதி அஹம்மது நாச்சியாருக்குச் சொந்தமானதும் மறு சர்வே எண்ணில் 39/2-ல் அடங்கிய ஏக்கர் 1-13 செண்ட் அயன் நஞ்செய் நிலத்தினைப் பரிவர்த்தனை செய்து கொள்ள அனுமதி வேண்டி 1959-ம் வருட இந்து சமய அறநிலையச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு.

மனு எண் 136/68/டி 1
தேதி 15—7—68

1. மேற்படி பரிவர்த்தனை மனு குறித்து ஆணையாளர், சென்னையிலுள்ள தம் அலுவலகத்தில் 18—9—68 அன்று பிற்பகல் 2 மணிக்கு விசாரணை நடத்துவார்.

2. கருத்துரைகளும் மறுப்புரைகளும் எவையேனும் இருப்பின், அவைகளை எழுத்துமூலமாக 17—9—68 அன்று அல்லது அதற்குமுன் இவ்வலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவைகளை மேல் குறிப்பிட்ட இடத்தில் நேரிலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எம். எஸ். வீராசாமி
ஆணையாளருக்காக

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

7--8--68

வாணியம்பாடி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு புதூர் மாரியம்மன் கோயில் தெருவில்; தலைவர் : எம். கே. குமார்; பேசுவோர் : சி. தமிழரசி, டி. ஜெகநாதன், தொ. வேலாயுதம், கோ. மா. இரகுபதி.

அரும்பாவூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணு திடலில்; தலைவர் : ஆ. பெருமாள்; பேசுவோர் : நன்னிலம் அ. நடராசன், இரா. நாராயணன் எம்.எல்.ஏ., ஜே. எஸ். இராசு எம்.எல்.ஏ., மு. துரைசாமி, பொ. தங்கவேல், வை. பரமசிவம், ந. உலகநாதன், மு. இராமசாமி, எம். வி. துரை, கி. இராசகோபால்.

குடந்தை

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு சாரங்கபாணி சன்னதியில்; தலைவர் : வி. சின்னத்தம்பி; பேசுவோர் : புதுவை. முன்னுள் முதலமைச்சர் குபேர், மு. கிருட்டினராசு, சு. பதமநாபன், ஏ. ஆர். இராமசாமி, பி. வி. செயராமன் எம்.சி., எஸ். ஆர். இராதா எம்.சி., ச. கோதண்டராமன், கோ. சுப்பராயன், எம். பழனிச்சாமி, ப. கோதண்டபாணி எம்.சி., வி. ஆர். எம். பாலு, கோவி. நாராயணசாமி, இரா. இராயதாசன், சை. சர்புதீன், ப. நாகராசன், இரா. முருகேசன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible]